# ஜீவ ஒளி

"என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்."
(யோவான் 8:12)

2017 ~ ஜனவரி ~ பெப்ரவரி ~ மார்ச் வெளியீடு



கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ
புதுப்பெலனடைந்து,
கழுகுகளைப்போலச்
செட்டைகளை அடித்து எழும்புவார்கள்.
ஏசாயா 40:31

# ஜீவ ஒளி

தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியை பெற்றுக்கொடுக்கக்கூடிய **ஜீவ ஒளி** சஞ்சிகையை வெளியிடுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இச்சஞ்சிகையின் மூலம் அநேக விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி அடைவதும் இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்வதுவுமே எங்களுடைய ஜெபமாயுள்ளது.

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம் வெளியிடும் இவ்விலவச சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் கடைசி பக்கத்தில் உள்ள கூப்பனை பூர்த்தி செய்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஜீவ ஒளி**
**கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்**
**07, விவேகானந்த வீதி, கொழும்பு 06.**
**தொ. பே.: 011 2 581901**
www.christianfellowshipcentre.com



# துன்பத்தின் நன்மை *அனுபவ சாட்சி*

**தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர். நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும். (2 கொரிந்தியர் 1:4,6)**

துன்ப துயரம் நேரிடும் வேளைகளிலும், மற்றவர்களால் குற்றஞ்சாட்டப்படுகின்ற வேளைகளிலும் நமக்கு மகா துக்கம் வருவதுண்டு. நம்முடன் பிறந்த சகோதர, சகோதரிகளே! நம்மை பகைத்து இழிவாய் எம்மை நடத்தும் பொழுது நமக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும். ஆனாலும், தேவனுக்கு ஸ்தோத்திரம்! நாம் கர்த்தர் இயேசுகிறிஸ்துவினால் ஆறுதல்படுத்தப்படுகிறோம்.

காலம் செல்ல, செல்ல என் வீட்டார் ஒவ்வொருவரோடும் தேவன் தம்முடைய சொந்த வழியிலேயே பேச ஆரம்பித்தார். அவர்கள் என்மீது வசை பாடின பொழுதெல்லாம் நான் அவர்களுக்கு விரோதமாக ஒரு வார்த்தையும் பேசாமல் அமர்ந்திருந்தேன். என் இருதயத்திலும் அவர்களை குறித்து எந்த விதமான வெறுப்புத்தன்மைகளும் எனக்கு உருவாகவில்லை.


என் தேவனுக்காக என் ஆண்டவரின் வார்த்தையின் படி இந்நிந்தைகளை எல்லாம் சகிப்பதற்கு ஒரு சிலாக்கியம் கிடைத்ததேவென்று என் தேவனுக்கே நன்றி செலுத்தினேன். இதில் அதிசயமென்னவென்றால், என்னை நிந்தித்து கண்டனம் செய்தவர்களே பின்னர் அவர்களுடைய துன்ப வேளைகளிலே தங்களுக்குத்தேவையான ஆறுதல்களுக்காக என்னைத் தேடி வந்தார்கள். நான் கைவிடப்பட்ட நாட்களில் எல்லாம் என் கர்த்தர் என் அருகில் இருப்பதை உணர்ந்தேன். “நான் எப்போதும் உன்னோடே இருக்கிறேன்” என்ற வார்த்தையினால் தேவன் என்னைத் தைரியப்படுத்தினார். அதன் பின்னர் அநேக ஆண்டுகள் பலவிதமான துன்பங்கள் நிறைந்த பாதையின் வழியே என்னை அழைத்து சென்ற போதிலும், என் ஆண்டவர் எனக்கு அருமையானவராகவே இருந்தார். இதை எல்லாம் தேவ நாமத்தின் மகிமைக்காகவே கூறுகிறேன். நான் மணிக்கணக்காக கண்ணீர் சிந்திய தருணங்களுண்டு. ஏனெனில், என் குடும்பத்தாரில் ஒருவராகிலும் என்னில் அன்பாகவோ, கரிசனையாகவோ இருக்கவில்லை. என்னை அவர்கள் வெறுத்து ஒதுக்கினார்கள். ஆனாலும், அவர்களுடைய ஒவ்வொரு தேவைக்கும் என்னுடைய உதவிகளை நாடி வரவேண்டிய காலமும் வந்தது. சான்றாக சில ஆண்டுகளுக்கு பின்பு எனது மூன்றாவது சகோதரன் 21 வயது நிரம்பிய தன்னுடைய மூத்த மகனை திடீரென இழந்து விட்டார். அச்செய்தி எனக்கு கிடைத்தவுடனேயே நான் விமானத்தில் பறந்து சென்று எனது தம்பியை சந்தித்தேன். அவனுடைய நிலைமையை வார்த்தைகளால் என்னால், சொல்லமுடியாது. துயரமே உருவாய் காட்சியளித்தான். என்ன ஆறுதலை அவனுக்கு கூறுவதென்றே எனக்கே புரியவில்லை.

அவன் அவ்வேளையில் என்னை நோக்கி “இப்பொழுது உன் தேவன் எங்கே? அவருக்கு இது தெரியாதா? என்று துயரதொனியில் என்னைக் கேட்டான். நான் மௌனமாகவே இருந்தேன். நான் முழங்காற்படியிட்டு “கர்த்தாவே! அவனுக்கு ஆறதல் அருளிச்செய்யும். அவனது துயரத்தை என்னால் தாங்க முடியவில்லை. என உருக்கமாக வேண்டுதல் செய்தேன். அந்த நாளிலேயே அவன் எழுந்து சவரம் செய்து குளித்து, உடைகளை மாற்றிக்கொண்டு தன் அலுவலகத்திற்கு சென்றான். அது என் கர்த்தருக்குள் எனக்கு மிகுந்த ஆறுதலையும் நிம்மதியையும் அருளிச்செய்தது

-சகோ. பக்த் சிங்-

# உயிர்ப்பிக்கும் தேவன்

## *அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார் (எபேசியர் 2:1)*



கிறிஸ்தவ வாழ்வானது ஆவியிலே மறுபடியும் உயிர்ப்பிக்கப்பட்ட வாழ்வாக இருக்கிறது. நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து நமது மாம்சமும் மனதும் விரும்புகிறவைகளை செய்து சுபாவத்தினாலே தேவனை அறியாதவர்களை போல தேவ கோபாக்கினைக்கு ஆளாகி இருந்தோம். தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மிடத்தில் அன்பு கூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மை கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார் எனும் சத்தியங்களை எபேசியர் 2:3-5ல் வாசிக்கிறோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமியில் மனிதராகிய சஞ்சரித்த நாட்களிலே அநேக அற்புதங்களை, அடையாளங்களை செய்தார். அவற்றுள் மரித்தவர்களை உயிரோடு எழுப்பிய அற்புதங்களும் உண்டு. முக்கியமாக மூன்று நபர்களை மறுபடியும் உயிரோடு எழுப்பிய சம்பவங்கள் புதிய ஏற்பாட்டிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

1. ஜெப ஆலயத்தலைவனாகிய யவீரு என்பவனது 12 வயது நிரம்பிய மகளை உயிரோடெழுப்பினார்.
(மாற்கு 5: 38 - 43)

2. நாயீன் ஊர் விதவையின் மகனாகிய வாலிபனை உயிரோடு எழுப்பினார். (லூக்கா 7: 11 - 15)

3. மார்த்தாள் மற்றும் மரியாளின் சகோதரனாகிய லாசருவை உயிரோடு எழுப்பினார். (யோவான் 11: 4 - 44)

யவீருவின் மகள் மரித்து ஒரு சில மணிநேரத்துக்குள் வந்து உயிரோடு எழுப்பினார். நாயீன் ஊர் விதவையின் மகனை அடக்கம் பண்ணப்போகும் வழியில் அவனை உயிரோடு எழுப்பினார். லாசரு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு நான்கு நாட்களுக்கு பின்பு வந்து அவனை உயிரோடே எழுப்பினார்.

ஆம்! எந்த சந்தர்ப்பத்திலும், எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் ஆண்டவரால் அற்புதங்கள் செய்ய அவர் அதிகாரம் உள்ளவர். ஆதலால், நாம் விசுவாசித்தால் மகிமையைக் காண்போம்.

மேற்கூறிய மூன்று அற்புதங்களிலும் நாம் சில ஆவிக்குரிய சத்தியங்களை விளங்கிக் கொள்வோம்.

முதலாவதாக யவீருவின் மகளின் சம்பவத்தில் இயேசுவானவர் யவீருவின் வீட்டிலேயே வந்து பிள்ளை இருந்த இடத்தில் பிரவேசித்து பிள்ளையின் கையைப் பிடித்து “தலித்தாகூமி” என்றார். அதின் அர்த்தம் “சிறு பெண்ணே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன்” என்பதாம். உடனே அச்சிறுபெண்ணும் எழுந்து நடந்தாள். இங்கே இச்சிறுபெண் எழுந்து நடந்தாள் எனும் பகுதியை நமது சிந்தனைக்கு எடுத்துக்கொண்டால், அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் ஆவியிலே மரித்துப்போன நிலையிலிருக்கும் ஒருவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தை அவனுக்குள் கிரியை நடப்பின்றபோது அவனுடைய நடத்தையில் ஒரு உயிர்மீட்சி ஏற்படு-

கின்றது. ஒரு காலத்திலே தனது மாம்ச இச்சையின்படி நடந்து தனது மாம்சமும், மனசும் விரும்பினவைகளைச் செய்து ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய சாத்தானுடைய ஆவிக்கேற்றபடியாக, நடந்து கொண்டிருந்தவன் இப்பொழுது தேவசித்தப்படி பரிசுத்த ஆவியான-வருடைய புதிதாக்குதலினாலே தேவ ஆவியின்படியே நடக்க தகுதி பெறு-கின்றான்.

கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.
ரோமர் 8:1

அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.
ரோமர் 8:11

இரண்டாவதாக நாயீன் ஊர் விதவையின் மகன் உயிர்த்தெழப்பட்ட சம்பவத்திலே இயேசுவானவர் "கிட்ட வந்து, பாடையைத் தொட்டார் அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள் அப்பொழுது அவர்: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

இங்கே "மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான்" என்ற பகுதியை நாம் சிந்தித்தால், ஆம், நாம் அஞ்ஞானிகளாய் இருந்த போது ஏவப்பட்டபடியே ஊமையான விக்கிரகங்களிடத்தில் மனதைச் செலுத்தினோம். ஆனால், இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியினால் முத்திரையிடப்பட்டு ஜீவனுள்ள தேவனோடு பேசவும், கர்த்தருக்காக பேசவும் தகுதி பெற்றிருக்-கிறோம். இதற்கு அப்போஸ்தலனாகிய பவுல் சிறந்த உதாரணம். தன் பழைய வாழ்க்கையில் சபையை துன்பப்-படுத்தி கிறிஸ்தவர்களை கொலை செய்பவர்களுக்கு உடந்தையான சவுல் எனப்பட்ட பவுல் ஆண்டவரின் தரிசனத்-தைப் பெற்று சீடனானவுடன் "தாமதம் இன்றி கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று ஆலயங்களிலே பிரசங்கித்தான். (அப்போ 9:20) மேலும், "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை. அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்-தால், எனக்கு ஐயோ" என்று 1 கொரி 9:16 ல் பவுல் கூறுகின்றான்.

ஆம்! ஆவியிலே உயிர்ப்பிக்கப்-பட்ட ஒவ்வொருவரும் சுவிசேஷம் சொல்ல அழைப்புப் பெற்றுள்ளார்கள். அவ்வாறு செய்யவில்லை எனில் ஏசாயா புஸ்தகத்தில் "அவர்கள் எலாரும் குலைக்கமாட்டாத ஊமையான நாய்கள் என்று கர்த்தரால் கடிந்து கொள்ளப்படுவர். ஆதலால், நாம் கர்த்தரோடு பேசுகிறோமா? கர்த்தருக்-காக பேசுகிறோமா?

மூன்றாவதாக மார்த்தாள், மரியாள் என்பவர்களின் சகோதரனாகிய லாசரு உயிர்த்தெழப்பட்ட சம்பவத்திலே "லாசருவே வெளியே வா" என்று உரத்த சத்தமாய் கூப்பிட்டார். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள் என்றார். யோவான் 11: 43,44

"இங்கே மரித்தவன் வெளியே வந்தான்" எனும் பகுதியை எமது சிந்தனைக்கு எடுத்துக்கொண்டால் அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்துப்போயிருக்கிற எவனொருவன் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பிரதான அழைப்பாகிய "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். (மத்தேயு 11:28) எனும் சத்தத்தைக் கேட்டு பாவ இருளாகிய கல்லறையை விட்டு வெளியே வருகிறானோ அவனுடை அக்கிரமத்தின் கட்டுகள் அவிழ்க்கப்பட்டு பரிபூர்ண ஜீவனைக் கொடுக்க அவர் வல்லவராய் இருக்கிறார்.

ஆண்டவர் சொல்லுகிறார்: "திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் (யோவான் 10:10). சிந்திப்போம்! செயலாற்றுவோம்!

- Bro. M. Gnanendran -

## வேதாகம புத்தகங்கள் பற்றிய புதுமையான புள்ளிவிபரங்கள்

## எண்ணாகமம்

| | | |
|---|---|---|
| எழுதியவர் | : | மோசே |
| காலம் | : | கி.மு. 1450-1410 |
| அதிகாரங்கள் | : | 36 |
| வசனங்கள் | : | 1288 |

### சாராம்சம்

11 நாளில் முடிய வேண்டிய பயணம் 40 வருட சோதனைப் பயணமாய் மாறிய விதமும் அக்காலத்தில் இடம்பெற்ற சோக சம்பவங்களும்

புதிதாய் மீட்கப்பட்ட தேவ ஜனத்துக்கு ஆராதனை, ஊழியம் மற்றும் கீழ்படிவு பற்றிய வழிகாட்டி

### கர்த்தர் அருளும் உத்தரவாதமும் இஸ்ரவேலர் செய்த கலகமும்

- இஸ்ரவேலரின் கலகம் (11-14)
- கர்த்தரின் உத்தரவாதம் (15)
- இஸ்ரவேலரின் கலகம் (16-17)
- கர்த்தரின் உத்தரவாதம் (18-19)
- இஸ்ரவேலரின் கலகம் (20-21)
- கர்த்தரின் உத்தரவாதம் (22-24)
- இஸ்ரவேலரின் கலகம் (25)
- கர்த்தரின் உத்தரவாதம் (26-36)

# ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிந்தின இரத்தத்தின் மேன்மைகள்

### 1. பாவ மன்னிப்பாகிய மீட்பு (பாவ மன்னிப்பு)

எபேசியர் 1:7/ கொலொசேயர் 1:14 - அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.

### 2. பரிசுத்தமாக்கப்படுதல் (சுத்திகரிப்பு)

1 யோவான் 1:7 - அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.

### 3. பாவங்களற கழுவுதல்

வெளிப்படுத்தின விஷேசம் 1: 6 - நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக.

### 4. மனசாட்சியை சுத்திகரித்தல்

எபிரெயர் 9:14 - நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!

### 5. நீதிமான்களாக்கப்படுதல் (நீதிமான்களாக கருதப்படுதல்)

ரோமர் 5:9 - நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க,...

### 6. தேவபிரசன்னத்திற்கு செல்லும் மார்க்கம் கிடைக்கப்பெற்றது

எபிரெயர் 10: 19,20 - நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறது

### 7. சத்துருவான பிசாசை ஜெயம்கொள்ளுதல்

வெளிப்படுத்தின விஷேசம் 12:11 - மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.

கற்றவைகளிலிருந்து.....

Sis. Tilaka

# நீ எங்கே இருக்கிறாய்?

- Sis. Beneventhoor Viji -

ஆதியாகமம் 3: 9 ல் தேவன் ஆதாமை நோக்கி நீ எங்கேயிருக்கிறாய் என்று கேட்டார். அவனோதேவ கட்டளையை மீறி பாவஞ் செய்தேனேயென்று தேவ சந்நிதிக்கு தன்னை விலக்கி ஒளித்துக்கொண்டான். இந்த நாட்களிலும் விசுவாசிகள் ஆதாமைப் போலவே தேவ சமூகத்திற்கு விலகி ஓடி ஒளிந்து கொள்கிறவர்களாக இருக்கின்றனர். காரணம் அவர்கள் செய்கின்ற பாவங்களுக்காகவே. ஆனால், எல்லோருடைய இருதயங்களையும் ஆராய்ந்து அறிகின்ற தேவன் அவர்களைக் காண்கின்றார்.


ஆதியாகமம் 12:1ல் கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. அவன் அப்படியே போனான்.

ஆதி12:4 கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான். லோத்தும் அவனோடேகூடப் போனான் ஆபிராம் ஆரானைவிட்டுப் புறப்பட்ட போது, எழுபத்தைந்து வயதுள்ளவனாயிருந்தான்.

அவன் யாவற்றையும் விட்டுவிட்டு அப்படியே போனான்.

ஆனால், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு, அழைக்கப்பட்டு, நீதிமானாக்கப்பட்டு காணப்படுகின்ற விசுவாசிகள் தங்கள் பழைய பாவ சுபாவங்களை விட்டு விடாமல் வாழ்கிறார்கள். உதாரணமாக பொய், களவு, மூர்க்கம், ஏமாற்றுதல், பேராசைகள், தூஷனம், சண்டைத்தனம், மற்றவரை தூஷித்தல், தற்பெருமை, குடிவெறி, உலக நட்புகள் என இன்னும் பல தீய பழக்கங்கள் இரட்சிக்கப்பட்ட பின்பும் காணப்படுகின்றது. ஆண்டு பல சென்றும் வாழ்வில் எவ்வித மாற்றமும் இல்லை.

பிரியமானவர்களே! தேவன் உங்களை இதற்காகவா அழைத்தார்? இல்லை. தம்முடைய பரிசுத்தத்திற்கு பங்குள்ளவர்களாக வேண்டும்.என்றே அழைத்தார். ஆகையால், நீ உன் பரிசுத்த அழைப்பை உணர்ந்து ஜென்ம சுபாவங்களை விட்டு விலகு. அதற்காக தேவ சமூகத்தில் கதறி ஜெபி! மனந்திரும்பு! இல்லையென்றால், நீ தேவ பக்தியின் வேஷத்தை தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவனாய் இருப்பாய். உன் இருதயம் தேவனுக்கு முன் சரியாய் இருந்தால், நீ எங்கே இருக்கிறாய் என்று தேவன் உன்னைத் தேட வேண்டியதில்லை. நீ சரியாய் இருந்தால் அவர் உன்னோடேயே இருப்பார். அவர் உன்னை என்றென்றும் கைவிடாமல் நடத்துவார்.



# நாகோனின் களம்

2 சாமுவேல் 6: 1-12 - Bro. Neville -

தாவீது ஆயிரம் பேருக்குத் தலைவரோடும் நூறுபேருக்குத் தலைவரோடும் சகல அதிபதிகளோடும் ஆலோசனை பண்ணி, இஸ்ரவேல் சபையையெல்லாம் நோக்கி: உங்களுக்குச் சம்மதியும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குச் சித்தமுமாயிருந்தால், இஸ்ரவேலின் தேசங்களிலெல்லாம் இருக்கிற நம் மற்றச்சகோதரரும், அவர்களோடே தங்கள் வெளிநிலங்களில் இருக்கிற ஆசாரியரும் லேவியரும் நம்மோடே கூடும்படிக்கு நாம் சீக்கிரமாய் அவர்களிடத்துக்கு ஆள் அனுப்பி,

நமது தேவனுடைய பெட்டியைத் திரும்ப நம்மிடத்துக்குக் கொண்டுவருவோமாகளூ சவுலின் நாட்களில் அதைத் தேடாதேபோனோம் என்றான்.

இந்தக் காரியம் சகல ஜனத்தின் பார்வைக்கும் செம்மையாயிருந்தபடியால், சபையார் எல்லாரும் அப்படியே செய்வோம் என்றார்கள்.

அப்படியே தேவனுடைய பெட்டியைக் கீரியாத்யாரீமிலிருந்து கொண்டு வரும் படி, தாவீது எகிப்தை சேர்ந்த சீகோர் நதிதுவக்கி ஆமாத்தின் எல்லை மட்டுமுள்ள இஸ்ரவேலை எல்லாங்கூட்டி, கேருபீன்கள் நடுவே வாசம்பண்ணுகிற கர்த்தராகிய தேவனுடைய நாமம் தொழுதுகொள்ளப்படுகிற அவருடைய பெட்டியை யூதாவில் இருக்கிற கீரியாத்யாரீமுக்கடுத்த பாலாவிலிருந்து கொண்டுவரும்படிக்கு, அவனும் இஸ்ரவேலர் அனைவரும் அவ்விடத்திற்குப் போனார்கள்.

தாவீது எத்தனையோ அனுபவங்களைக் கடந்து இறுதியாக முழு இஸ்ரவேலுக்கும் அரசனானான். அதற்கு பின்பும் அவன் இன்னும் என்ன கற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் கற்றுக்கொடுக்கிறார். தேவன் அவனை அரசனாக்குவதற்கு முன்பு அதிக காலங்களில் ஒரு நீண்ட பயிற்சிக்கூடாக நடத்தினார். (Testing period) தீர்க்கதரிசியாக சாமுவேல் அவனை இராஜாவாக அபிஷேகித்து சுமார் எட்டு வருடங்களுக்கு பிற்பாடே தாவீது இராஜாவாகினான்.

எமது கிறிஸ்தவ வாழ்விலும் எம் ஒவ்வொருவருக்கும் ஒரு ஊழியத்திற்காக தேவன் எமக்கு பயிற்சி கொடுக்கிறார். தாவீது அரசனோ தேவன் பேரில் மிகுந்த பக்தி வைராக்கியம் உடையவனாயிருந்தான். அவன் இராஜாவாகிய உடனேயே முதலாவதாக தேவனுடைய காரியங்களை செயல்படுத்த தீர்மானம் எடுத்தான். முதலாவதாக தேவனுடைய உடன்படிக்கை பெட்டியை எருசலேமுக்கு கொண்டு வரவேண்டும்.

உங்களுக்கு நினைவிருக்கிறதா? சில வருடங்களுக்கு முன்பு தான் 1 சாமுவேல் 4:21-22ல் பெலிஸ்தியரோடு இஸ்ரவேலருக்கு ஏற்பட்ட யுத்தத்தில் இஸ்ரவேலர் படு தோல்வியடைந்த வேளையில் தேவனுடைய உடன்படிக்கை

பெட்டியையும் அவர்கள் கைப்பற்றி தங்கள் நாட்டுக்கு எடுத்து சென்றனர். அதன்நிமித்தம் தேவன் அவர்களை தண்டித்தபேர்து, கிபியாவில் வசித்த அபினதாபின் வீட்டிலே உடன்படிக்கை பெட்டியை ஒப்படைத்தார்கள்.

இஸ்ரவேல் ஜனங்களை பொறுத்த மட்டிலே அவர்களின் வாழ்வானது. தேவனின் பிரசன்னத்தை மையப்படுத்தியே அமைந்திருந்தது அவர்களின் உயிர்மூச்சாக இருந்த உடன்படிக்கை பெட்டியையை இழந்து அவர்கள் மிகுந்த சஞ்சலத்தோடும், தவிப்போடும் பல தோல்விகளை சந்தித்தும் வாழ்ந்தார்கள். ஆதலால் தான் தாவீது அரசன் உடன்படிக்கை பெட்டியை கொண்டு வருவோம் என்று சொன்ன மாத்திரத்திலேயே ஜனங்கள் உற்சாமும் எழுச்சியும் அடைந்தார்கள். அதை ஒரு பெரிய ஊர்வலமாக்கினாக்கினார்கள். அவர்கள் சரித்திரத்தில் காணப்படாத ஒர் ஊர்வலமாக்கினார்கள் ஆடினார்கள், பாடினார்கள் கொண்டாடினார்கள். வெளிப்படையாக எல்லாமே நன்றாகத்தான் இருந்தது. ஆனால், நாகோனின் களத்திற்கு வந்தவுடன் என்ன நடந்தது. நன்றாக பயிற்றுவிக்கப்பட்ட காளைகள் (Royal bulls) மிரண்டன. இந்த இடத்தில் நாம் தேவனுடைய கரத்தை மட்டுமே நாம் நினைவுகூற வேண்டும். மற்றது

இஸ்ரவேல் ஜனங்களை பொறுத்த மட்டிலே அவர்களின் வாழ்வானது தேவனை மையப்படுத்தியே அமைந்திருந்தது. பொன்னினால் உருவாக்கப்பட்ட உடன்படிக்கைபெட்டி கூடாரத்தில் தேவபிரசன்னம் நிறைந்த இடத்தில் இருந்தது. அவர்களுடைய வனாந்தர யாத்தியையில் பரிசுத்த கூடாரத்தையும், அதிலுள்ள பரிசுத்த பொருட்களையும் தோளில் சுமக்கவும் பணிகள் புரிவதற்கும் என்றே லேவி கோத்திரத்தில் மூன்று பிரிவினரை நித்திய (மாறாத) நியமமாக நியமித்திருந்தனர். அதிலும் சிறப்பாக தேவனுடைய உடன்படிக்கை பெட்டியை தோளிலேயே சுமக்க வேண்டும். லேவியின் புதல்வனான கோகாத்தின் புத்திரருக்கே ஆத தலையாய கடமையாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. எண்ணாகமம் 4:15 / 7: 9

தாவீது இவ்வளவு பாரதூரமான நியதிகளை அறிந்திருந்தும் அவன் ஒரு சராசரி மனிதனானான். நான் மிகவும் கோலாகனமான முறையில் ஒரு புது விதமான முறையில் உடன்படிக்கை பெட்டியை கொண்டு வர வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் செயல்பட தொடங்கினான். அதன் அடிப்படையில் தேவ கோபம் வந்தது.

இந்த இரதபவனியை அவன் பெலிஸ்தியரிடமிருந்து கற்றுக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. ஏனெனில் இந்த விதமான இரத பவனிகள் பெலிஸ்தியரின் தெய்வ வழிபாடுகளில் அமோகமாக கடைப்பிடிக்கப்பட்டன.

நாமும் கூட தேவ ஊழியங்களில் வைராக்கியமாக, உற்சாகமாக புது விதமாக செயல்பட வாஞ்சிப்போம். ஆனாலும், அவைகள் தேவனுடைய பார்வையில் எப்படி இருக்கிறது என்பதே மிக மிக அத்தியாவசியமானதாகும். ஆதலால், வேதத்தில் உள்ள கொள்கைகளுக்கமையவே ஊழியஞ்செய்ய எம்மைக் பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும்.

உதாரணம்: சபையில் ஒருவரின் தலைமைத்துவம் இலகுவாக இருந்தாலும்

அதற்கு மேற்பட்ட மூப்பர்களின் ஆலோசனைகள் மிகவும் நன்மைகளை கொண்டுவரக்கூடியதாய் இருக்கும்.

சபை ஒன்று சேர்ந்து பாடலாம் ஆனாலும், ஒன்று சேர்ந்து துதிப்பதை தவிர்த்து ஒருவர் பின் ஒருவராக தேவனைத் தெரிந்த பாஷைகளில் துதித்து அவரை தொழுது கொள்வது வேதத்தின் அடிப்படையில் சாலச்சிறந்ததாக புலப்படுகிறது.

நாகோனின் களத்திலே நடந்த சம்பவத்தில் நாம் என்ன கற்றுக்கொண்டோம்? தாவீது என்ன கற்றுக்கொண்டான்? நாம் உற்சாகப்பட்டு எழுப்புதல் அடைந்து ஊழியங்கள் செய்தாலும் வேதத்திலுள்ள விதி முறைகளை மீறக்கூடாது. தவறுகள் நேரிடலாம். உடனே தேடி ஆராய்ந்து சரியானதை கண்டுபிடிக்க வேண்டும்.

தாவீது அரசன் சரியானதை புரிந்து கொண்டு தேவனுடைய பெட்டியை சுமந்து வரும் முறைமையைக் கடைப்பிடிப்பிடித்து நடந்தான். அது பிரபலமாக தென்படாவிட்டாலும் தேவனால் அனுமதிக்கப்பட்டது. தேவனுடைய ஊழியங்களில் சில பிரபலமாக தோன்றாவிட்டாலும் தேவனால் அனுமதிக்கப்படுகிறதா? என்பதிலேயே தங்கியுள்ளது?

**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12:2)**

## எங்கள் ஐக்கியத்தில் இடம்பெறும் கூட்டங்கள்

**ஞாயிற்றுக்கிழமை**

மு.ப. 8.15 - ஞாயிறு பாடசாலை
மு.ப. 9.30 - ஆராதனை வேளை
பி.ப 1.30 - வாலிபர் கூட்டம்
பி.ப. 4.00 - சுவிசேஷக்கூட்டம் (சிங்கள மொழி)
பி.ப. 6.00 - சுவிசேஷக்கூட்டம் (ஆங்கில மொழி)

**செவ்வாய்க்கிழமை**

பி.ப 6.30 - சுவிசேஷக்கூட்டம் (தமிழ் மொழி)

**புதன் கிழமை**

பி.ப 6.00 - ஜெபக்கூட்டம்

**வெள்ளிக்கிழமை**

பி.ப 6.00 - வேத ஆராய்ச்சி

இக்கூட்டங்களில் பங்குபெற உங்கள் அனைவரையும் அழைக்கிறோம்!



# சத்தியமாய் சாத்தியமா?

சபையின் சரித்திரத்தில் சபைத்தலைவர்க்காய் சாகசங்கள்

வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது போல வாழ்வது தற்கால உலகத்துக்கு பொருந்தாது என்பதே இன்றைய நவீன யுகத்தில் வாழும் நம்மில் பலரது குறிப்பாக இளைஞர்களது எண்ணமும் கருத்துமாகும். எபிரேயர் 11ல் பழைய ஏற்பாட்டுக்காலத்தில் வாழ்ந்த விசுவாச வீரர்களின் பெயர்ப்பட்டியல் நமக்கு நினைவுறுத்துவது நாமும் அவர்களைப்போல வாழ வேண்டும் என்பதையே.

கிறிஸ்தவனாய் வாழ்வதில் எத்தனை பாடுகள் இருப்பினும் உண்மையான கிறிஸ்தவனாய் வாழ்வது சத்தியமாய் சாத்தியமா? அப்படிப்பட்டவர்களில் ஒருவர் தான் **ஜான் பேட்டன்**.

## ஜான் பேட்டன்

நீங்கள் என்னை அம்பு எய்து, சுட்டு கொன்று போடலாம். ஆனால் நானோ உங்களுடைய உண்மையான நண்பன். நான் நேசித்து சேவிக்கிற என் ஆண்டவர் இயேசுவிடம் என்னை அதிசீக்கிரத்தில் அனுப்புகிறீர்கள் என்பதைத் தவிர மரணம் என்னை ஒன்றும் செய்யாது. உங்கள் மத்தியில் மரிக்க நான் பயப்படவில்லை என முழங்கினார் ஜான் பேட்டன். பயங்கர ஆயுதங்களோடு மிருகத்தனமாகத் தன்னைத் தாக்க வந்த மிலேச்சர்கள் நடுவில் தைரியமாய் நின்றார் ஜான் பேட்டன். அன்பும் இரக்கமும் அவர் முகத்தில் காணப்பட, அமைதியும் தைரியமும் உள்ளவராய் முழங்கால்படியிட்டார். கிறிஸ்துவின் அன்பைக் கூற வந்த இத்தெய்வத் தூதுவரை எந்நேரத்திலும் கொல்ல ஆயத்தமாயிருந்தனர் அம்மிலேச்சர்கள்.

1984ம் ஆண்டு ஸ்காட்லாந்தில் தெய்வ பயமிக்க பெற்றோருக்கு பிறந்த ஜான் 12-ம் வயதில் தன் தகப்பனுக்கு வாணிகத்தில் உதவி செய்தும், கிரேக்க லத்தீன் மொழிகளைக் கற்றும் அறிந்தார். இயந்திரங்களையும், இயந்திர சாதனங்களையும் அவர் பயின்று கொண்டமை பிற்காலத்தில் அவர் மிஷனரியாகப் பணிபுரியும் போது பேருதவியாக இருந்தது. அவைகளுக்கு முன்னதாகவே ஜான், கிறிஸ்துவைத் தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு தன்னை ஒரு நற்செய்திப் பணியாளனாக ஆயத்தம் செய்ய ஆவல் கொண்டார். கிளாஸ்கோ நகரத்தில் இறையியல் கல்லூாயில் சேரும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. தன்னைப் பயிற்றுவிக்க வீட்டை விட்டு வேதாகமக் கல்லூயில் சேர்ந்தார்.

கிளாஸ்கோ நகரத்தில் வாழ்க்கை மிகக் கடினமானது. ஜான் மருத்துவம், இறைநூல் ஆகியவற்றைப் படித்துக் கொண்டு அங்குள்ள ஒரு பள்ளியில் ஆசிரியராகப் பணி செய்தார். தன் வாழ்க்கைச் செலவை ஈடுகட்ட உழைத்தார். நகரின் ஒரு பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்டோருக்காக சேவை செய்யும் கிளாஸ்கோ நகர மிஷனரி ஸ்தாபனத்தில் சேர்ந்து கிறிஸ்தவ சேவையில் ஈடுபட்டார். அநேக ஆண்டுகள் இந்த ஊழியம் அவருக்கு மனச்சோர்வைக் கொண்டு வந்தது என்றாலும் தொடர்ந்து திருப்பணிகளை செய்து வந்தார். பெரிய அளவில்

கர்த்தருடைய திராட்சைத் தோட்டத்தில் பணிபுரியுமுன், ஒரு சிறிய இடத்தில் பணிபுரிந்து தன் உண்மையை நிரூபித்துக் காட்டினார். பத்து ஆண்டுகளுக்குப் பின்னரே, அவருடைய உண்மை ஊழியம் பலன் தர ஆரம்பித்தது.

ஆனால் கிளாஸ்கோ நகர மிஷன் ஸ்தாபனம் அவரை வெளிநாடு செல்ல அனுமதிக்கவில்லை. அவருக்கு அறிமுகமானவர்களும், நண்பர்களும் அவரைப்-புரிந்து கொள்ளமுடியாமல் தவித்தனர். ஏன் இவர் மிலேச்சர்களிடம் செல்ல வேண்டும் என்று நினைத்தார்கள். ஒரு வயோதிபர் போகவேண்டாம் இளைஞனே, நரமாமிசப் பட்சிணிகள் உன்னைத் தின்று விடுவார்கள் என்றார்.

அதற்கு ஜான் பேட்டன் சிரித்தபடியே பதிலளித்தார். "பெரியவரே நீங்கள் வயது சென்று சில நாட்களில் மரித்து அடக்கம் செய்யப்படலாம். மண்ணுக்கடியில் புழுக்கள் அரித்து சாப்பிடும். நான் கிறிஸ்து இயேசுவை கனப்படுத்தி கீழ்ப்படிந்து அவரைச் சேவிக்கும் போது மனிதர் சாப்பிட்டால் என்ன? புழுக்கள் அரித்தால் என்ன?" என்றார்.

பல ஆண்டுகளாக பல தீவுகளில் நரமாமிசப் பட்சிணிகளிடம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைச் சொல்லி ஊழியஞ் செய்து வந்தார். தன் வாழ்நாட்காலங்களில் எத்தனையோ உபத்திரவங்களையும் மிரட்டலகளையும் சந்தித்தார்.

முதுமை அடைந்த நிலைமையிலும், தெய்வ தூதுவர் ஜான் பேட்டன் அவர்கள், நரமாமிசப் பட்சிணிகளுக்கென்று என் உயிருள்ளவரை உழைப்பேன் என்று தீர்மானித்தார். நியூஹெப்ரிட்ஸ் தீவுகளின் இரட்சிப்புக்கென்று ஆஸ்திரேலியாவில் இருந்து கொண்டே ஜெபிப்பார். மற்றவர்களையும் ஜெபிக்கத் தூண்டுவார். பொருளாதாரத் தேவைகளை தேடி அனுப்புவார். அவரும் தீவுகளுக்குச் சென்று திருப்பணியில் ஈடுபடுவார். அவருடைய மகனும் டான்னா தீவில் தங்கி ஊழியம் செய்து கொண்டு இருந்தார். முன்பு பேட்டனை வெளியேற்றிய அத்தீவார் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தனர். முடிவில் நூற்றுக்கணக்கான மிலேச்சர்களும் நரமாமிசப் பட்சிணிகளும் கிறிஸ்துவிடம் வருவதைப் பார்த்த பின் 1907-ம் ஆண்டு ஜனவரி 28-ம் நாள் மகிமைக்குள் பிரவேசித்தார். அப்போது அவருக்கு வயது 88. இன்று, ஐந்து புரோட்டஸ்டண்டு, மிஷனரி இயக்கங்கள் நியூஹெப்ரிட்ஸ் தீவுகளில் பணிபுரிந்து வருகின்றன. டான்னா தீவையும் சேர்ந்த எல்லாத் தீவுகளிலும் ஜான் பேட்டன் அவர்களின் சலியாத உழைப்பின் பயனாக ஏராளமான கிறிஸ்தவ மக்கள் இன்றும் கிறிஸ்துவை வணங்கிப் போற்றுகிறார்கள்.

ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள்
நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும்,
நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும்
தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும்
முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு
நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே
ஓடக்கடவோம்.
எபிரேயர் 12:1

# யாருக்கு முதலிடம் ???

ஸ்கொட்லாந்தை சேர்ந்த “எரிக்லிடல்” எனும் வாலிபர் சீனாவுக்கு மிஷனெரியாக செல்ல தன்னை அர்ப்பணித்திருந்தார். அவருக்கு பல சிறப்பு திறமைகள் இருந்தது. றகர் விளையாட்டு வீரனாகவும், ஓட்டப்பந்தய வீரனாகவும் திகழ்ந்தார். (100மீ குறுந்தூர ஓட்டவீரன்) எரிக் எடுத்த சாதனையை இங்கிலாந்து நாட்டில் சுமார் முப்பத்தைந்து வருடங்களாக யாராலும் முறியடிக்க முடியவில்லை.

1924 ல் பாரிஸில் இடம்பெற்ற ஒலிம்பிக்கில் இவர் பங்குபெற இவருக்கு வாய்ப்பு கிடைத்தது. ஆனால் ஒட்டப்பந்தயத்திற்கான தேர்வு ஓட்டம் ஞாயிற்றுக்கிழமையாக இருந்தது.

எரிக் ஞாயிற்றுக்கிழமை ஆராதனைக்கு செல்ல வேண்டும் என்பதால் அந்த போட்டியில் பங்குபெற மறுத்துவிட்டார். உலகின் புகழை சம்பாதிப்பதை விட தேவனுக்கு கீழ்ப்படிவதே மேல் என நன்கு அறிந்திருந்தார்.

அதே ஞாயிற்றுக்கிழமை ஒரு ஆலயத்தில் பிரசங்கம் பண்ண ஒப்புக்கொண்டு அதை நிறைவேற்றினார். இவருடைய இச்செயலை தேவன் கனம்பண்ணினார்.

அவர் பங்குபெற வேண்டிய பந்தயம் ஞாயிற்றுக்கிழமை என்று அதை அவர் தவிர்த்தபடியால் மூன்று நாட்களுக்கு பின் இடம்பெற்ற 400 ஆ ஓட்டப்பந்தயத்திலேயே அவர் பங்குபெறவேண்டிய ஒரு நிர்ப்பந்த நிலை உருவானது.

மூன்று நாட்களுக்கு பின் நடந்த அந்த நெடுந்தூர ஓட்டப்பந்தயத்தில் பங்கு பற்றி முதலாவது ஸ்தானத்தை பெற்று தங்கப்பதக்கத்தை சுவீகரித்தார்.

தம்மை கனம்பண்ணுகிறவர்களை கனம்பண்ணுகிற தேவனல்லவா நம் தேவன்! என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன். 1 சாமுவேல் 2:30

அவர் அர்ப்பணித்தபடியே சீனாவுக்கு சென்று மிஷனரி ஊழியத்தை நிறைவேற்றி 1945 ஆம் வருடம் ஆண்டவருக்குள் நித்திரையடைந்தார். நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். 2 தீமோத் 4:7



**எரிக் லிடலின் தனிப்பட்ட சில கருத்துகள்:**

“தேவன் என்னை வேகமாக படைத்துள்ளார். நான் ஓடும்போது அவருடைய இன்பத்தை உணர்கிறேன்.”

“நீங்கள் தேவனால் நடத்தப்படாவிட்டால், வேறொன்றாலோ அல்லது வேறொருவராலோ நடத்தப்படுவீர்கள்”

“நம்மில் அநேகர் வாழ்வில் யாதொன்றை இழந்துவிடுகிறோம் ஏனென்றால் நாம் இரண்டாவதாய் சிறந்ததையே நாடுகிறோம்”

- Bro. Chandran -

# ஆண்டவரை சிறந்த முறையில் தொழுது கொண்டவள்

- Sis. Anne Jayasundara -

இவளைப்பற்றி அறிந்து கொள்ள மத்தேயு 26: 6 - 13 / மாற்கு 14: 3 - 9 ஆகிய பகுதிகளை வாசித்தேயாக வேண்டும். இந்தப் பெண்ணானவள் பெத்தானியாவில் வாழ்ந்தவளாயிருந்தாலும் லாசரு, மார்த்தாள் என்போரின் சகோதரி அல்ல என்பதை தேவ வசனத்தின் வெளிச்சத்திலே நாம் பார்க்க வேண்டும். மத்தேயு 26:2 /மாற்கு 14:1 ல் பஸ்கா பண்டிகைக்கு இரண்டு நாள் இருக்கவே அவள் ஆண்டவரின் சிரசில் பரிமள தைலத்தை ஊற்றி தொழுது கொண்டாள் என்று பார்க்கிறோம். ஆனால், மரியாள் பஸ்கா பண்டிகை வர ஆறு நாளைக்கு முன்பதாக அவர் பாதங்களில் பரிமளதைலம் பூசி தொழுதுகொண்டாள். யோவான் 12: 1 - 3

பெயர் குறிப்பிடப்படாத இவளது சில சிறப்பம்சங்களை கணக்கிட்டுப் பார்ப்போம்.

1. ஆண்டவர் மரிப்பதற்கு முன்பே தாமதிக்காமல் ஆண்டவரை பரிமள தைலத்தால் அபிஷேகித்து தொழுது கொண்டாள். லூக்கா 23:5/24:1 இந்த ஸ்திரிகள் ஆண்டவர் மரித்த பின்பே அவரை பரிமள தைலங்களினால் அபிஷேகிக்க செல்லுகிறார்கள். நமது நாட்டிலும் ஒருவர் இறந்தவுடனோ, அடக்கம் பண்ணி தாமதமாகவே வாசனையுள்ள மலர்மாலைகளை கொண்டுவருவார்கள். ஆதலால் ஒருவர் உயிரோடு இருக்கும்போதே நன்மை செய்வது சாலச்சிறந்ததாகும். எமது நற்கிரியைகளுக்கான பலன் பரலோகத்தில் இருக்க வேண்டும்.

2. அவளின் இச்செயலை ஆண்டவர் பாராட்டுகிறார். அவளின் பெயர் கூட சொல்லப்படவில்லை. அவளை, அவள் இவள் என்று சொல்வதையும் அவள் பொருட்படுத்தவில்லை. ஆனால் இன்றைய ஊழியக்காரர்கள், ஊழியக்காரிகள் பெயர், புகழுக்காக என்னென்னவெல்லாம் நடித்துக் காட்டுகிறார்கள். பவுல் என்ன சொலலுகிறாரென்றால், பிலிப்பியர் 3:7,11 எனக்கு லாபமாய் இருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன் குப்பையுமாக எண்ணுகிறேன்.

3. அவள் ஆண்டவர் யார்? அவர் எப்பேர்ப்பெற்றவர்? அவருக்காக நான் என்ன கொடுக்கலாம்? என சிந்தித்தாள். ஆகவே தான், அவள் அதிக பணத்தை செலவழித்து அந்த விலையுயர்ந்த வாசனைத்திரவியத்தை வாங்கி வந்தாள். எவ்வளவோ ஜனங்களுக்கு நடுவிலே அவர் விசேஷித்தவர் என்று அவள் கண்டுகொண்டாள். ஆனால், புதினம் என்னவென்றால் அவரோடு இருந்த



சீஷர்களும், மற்றவர்களும் ஏன் தான் இப்படி கண் மூடித்தனமாக இருந்தார்-களோ? தெரியாது. அவர்கள் அவரை அறிந்திருந்தாலும் அவளது மட்டத்துக்கு அவர்களால் அவரை பார்க்க முடிய-வில்லை. தரிசிக்கவும் முடியவில்லை.

4. ஆண்டவரை அபிஷேகித்தவர்-களில் இவள் தைரியசாலியாக இருந்திருக்க வேண்டும். ஆண்டவரை சூழ்ந்து அநேகர் நின்றார்கள். ஆண்டவர் போஜனபந்தியில் அமர்ந்திருந்திருக்கும் போதே அவருடைய சிரசில் அந்த வாசனை திரவியத்தை அமைதியாக ஊற்றுகிறாள். பாருங்கள் யாருக்கு இந்த தைரியம் வரும்?

5. அநேகர் இவள் செய்த இந்தச்-செய்கையை விமர்சித்தனர். அதை-யெல்லாம் அவர் ஒரு பொருட்டாக கருதவில்லை. நாமும் கூட தேவனின் ஊழியங்களில் ஈடுபடும் போது, தேவை-யில்லாத விமர்சனங்களைக் கண்டு கொள்ளாமல் ஆண்டவருக்காக முழு தைரியத்துடன் ஊழியஞ்செய்வோம். மனிதர்கள் என்னைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள் என்பதில் அல்ல, ஆண்டவர் என்னைப்பற்றி என்ன சொல்லுவார்?

அவளைப்பற்றி ஆண்டவர் என்ன சொல்லுகிறார்? “இவள் தன்னால் இயன்றதை செய்தாள். நான் அடக்கம் பண்ணப்படுவதற்கு எத்தனமாக, என் சரீரத்தில் தைலம்பூச முந்திக்கொண்-டாள். என்னிடத்தில் நற்கிரியைச்செய்-திருக்கிறாள். இவள் இந்தத் தைலத்தை என் சரீரத்தின் மேல் ஊற்றினது என்னை அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது. இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப் படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும்.” என்கிறார்.

6. சீஷர்களின் மற்றும் சிலரின் கருத்தானது ஏழைகளை குறித்து கரிசனையுள்ளவர்களைப் போன்று காணப்படுகின்றனர். அதை விட ஆண்டவரில் அன்புகூறுவதும், நம்மோ-டிருக்கும் இத்தெய்வத்துக்கு தொண்டு செய்வதுமாக நினையாமல் பேசினார்-கள். இன்றும் அநேகர் இப்படித்தான் ஏழைகளுக்கு தொண்டு செய்கிறோம் என்று பல விதமாக செயல்படுவார்-கள். ஆண்டவர் அவர்கள் வாழ்வில் எங்கேயிருக்கிறார். ஆதலால் தான் ஆண்டவரே சொல்கிறார்: “தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்-கள் நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன். ஆதலால், ஆண்டவருக்கு எம் வாழ்வில் முதலிடம் கொடுப்போம். பக்தி நிறைந்த வாழ்க்கை வாழுவோம்.

**பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள், நடுக்கத்துடனே களிகூருங்கள். சங்கீதம் 2:11**




நற்கிரியைகள் என்றால் நாம் செய்யும் நல்ல செயல்கள். நல்ல செயல்கள் நிறைய காணப்பட்டாலும் அவற்றை செய்வதற்கு நமக்கு இரக்கம் தேவைப்படுகிறது. மத்தேயு 5:7ல் "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் இரக்கம் பெறுவார்கள்" என கூறப்படுகிறது.

இவ்வானம் பூமி அண்டசராசரங்கள், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மற்றும் அனைத்தையும் படைத்த சர்வ வல்லமை கொண்ட தேவன் அவர் படைத்த மனுக்குலத்திற்காக முதலாவதாக செய்த காரியம், இரக்கம். அந்த தெய்வீக இரக்கத்தை பெற்ற நாமும் இரக்கத்தை வெளிப்படுத்த வேண்டும்.

**மத்தேயு 25:42,43**

"பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை தாகமாய் இருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை
அந்நியனாயிருந்தேன், நீங்கள் என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை. வஸ்திரமில்லாதிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங்கொடுக்கவில்லை. வியாதியுள்ளவனாயும் காவலில் அடைக்கப்பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லையென்பார்."

மேற்கூறிய கூற்று இரக்கமில்லாதவர்களைக் குறித்தல்லவா கூறுகிறார். இப்படிப்பட்ட குறைகள் உள்ளவராக நாம் ஆண்டவரை நேரடியாகக் காண்கிறோமா? இல்லையே! அப்படியென்றால், அன்றாடம் நாம் காணும் குறைகளுள்ளவர்களுக்கே இரக்கம் பாராட்டும்படி சொல்கிறார்.

நீதிமொழிகள் 19:17 - ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான் அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்.

நாம் மனிதருக்கு கொடுத்த கடன்கள் எத்தனையோ மறக்கப்பட்டுவிட்டன. ஆனால், நம் சர்வ வல்லமை உள்ள கர்த்தருக்கு கொடுக்கும் கடன்களையோ யாராலும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது என்பதற்கு தொற்காள் எனும் தபீத்தாளுடைய வாழ்வு வேதத்தில் ஆதாரமான சாட்சியாயுள்ளது

**தொற்காள் எனும் தபீத்தாள்**

அப்போஸ்தலர் 9:36 - யோப்பா பட்டணத்தில் கிரேக்கப் பாஷையிலே தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள் அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்தாள். அந்த நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரண-

மடைந்தாள். அவளைக் குளிப்பாட்டி, மேல்வீட்டிலே கிடத்திவைத்தார்கள்.

யோப்பா பட்டணம் லித்தா ஊருக்குச் சமீபமானபடியினாலே, பேதுரு அந்த இடத்தில் இருக்கிறானென்று சீஷர்கள் கேள்விப் பட்டு, தாமதமில்லாமல் தங்களிடத்தில் வரவேண்டும் என்று சொல்லும்படி இரண்டு மனுஷரை அவனிடத்திற்கு அனுப்பினார்கள்.

பேதுரு எழுந்து, அவர்களுடனே கூட போனான். அவன் போய்ச்சேர்ந்த போது, அவர்கள் அவனை மேல் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனர்கள். அப்பொழுது விதவைகள் எல்லாரும் அழுது தொற்காள் தங்களுடனே கூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து, அவனைச் சூழ்ந்துநின்றார்கள்.

பேதுரு எல்லாரையும் வெளியே போகச்செய்து, முழங்காற் படியிட்டு ஜெபம்பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி: தபீத்தாளே, எழுந்திரு என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள்.

அவன் அவளுக்குக் கைகொடுத்து, அவளை எழுந்திருக்கப்பண்ணி, பரிசுத்தவான்களையும் விதவைகளையும் அழைத்து, அவளை உயிருள்ளவளாக அவர்களுக்கு முன் நிறுத்தினான்.

ஜீவனைக் கொடுக்கவும் ஜீவனை எடுக்கவும் அதிகாரமுள்ள ஆண்டவருக்கே அவள் நற்பணி செய்ததாக எண்ணப்பட்டது. அந்த ஜீவனுள்ள ஆண்டவர் அவளுடைய உயிரை திரும்பவும் கொடுத்துவிட்டார்.

### கொர்நேலியு

கொர்நேலியு என்ற நூற்றுக்கு அதிபதியின் தான தருமங்கள் பரலோகத்திலிருந்து ஒரு தூதனையே இறங்கி வரச்செய்தது. அது எவ்வளவு பெரிய ஆச்சரியம்!

அப்போஸ்தலர் 10: 4ல் "அப்பொழுது அவன்: உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்து எட்டியிருக்கிறது." என்று தூதன் கூறினான்.

பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள். அந்நியரை உபசரிக்க நாடுங்கள். என்று வேதம் நமக்கு புத்தி சொல்லுகிறது. ரோமர் 12:13

ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும். என்று வேதம் நமக்கு எச்சரிக்கிறது. யாக்கோபு 4:17

நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாய் இருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார். எபேசியர் 2:10

**மத்தேயு 5:7**

**இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் இரக்கம் பெறுவார்கள்**

# உங்களுக்கு தெரியுமா

1. தேவன் முதலில் நாளில் எதனை படைத்தார்?

2. தேவன் முதலாவதாக எந்த வாதையை எகிப்தியருக்கு அனுப்பினார்?

3. இஸ்ரவேல் நாட்டின் முதலாவது அரசன் யார்?

4. வேதாகமத்தில் உள்ள முதலாவது தீர்க்கதரிசி யார்?

5. முதலாவது கொலைகாரன் யார்?

- Benvendoor Sam Fernando -

## ஜீவ ஒளி

**ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்தும் நான் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.**

**பெயர்:** ..............................................................................................

**முகவரி:** ..............................................................................................

..............................................................................................

..............................................................................................

**ஒப்பம்:** ..............................................................................................

# ஜீவ ஒளி

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்தினால் இலவசமாக வெளியிடப்படும்
ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால்
உள்ளே இருக்கும் கூப்பனில் உங்கள் பெயரையும் முகவரியையும் நிரப்பி
அனுப்பிவையுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:


Jeeva Oli
Christian Fellowship Centre
7, Vivekananda Road, Wellawatte,
Colombo 6.
Tel: 2581901
www.christianfellowshipcentre.com